**பேருவளை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 19 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேருவளை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 146,100 தொகையான பதிவுப் பொருள் மூலதனமயமாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 271,900 கூட்டுத்தொகை பொதுக் களஞ்சியமாக இருப்பு மீதிக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வருமானச் செலவினக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய ரூபா 678,835 கூட்டுத்தொகையான வருமானமும் ரூபா 215,677 கூட்டுத்தொகையான செலவினமும் திரண்ட நிதிக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 76,281,123 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,377,303 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 66,345,982 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 16,467 | 10,844 | 14,347 |
| (ii) | வாடகை | 15,605 | 13,154 | 3,029 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,899 | 1,908 | -- |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 18,862,985 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 19,693,531 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் 2014 ஆம் ஆண்டின் போது நானாவித செயற்பாடுகளுக்காக உபசாரச் செலவினங்களுக்காக ரூபா 3,098,544 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 1,384,955 தொகை அத்தியாவசிய கடமைகளுக்காகவும் ரூபா 455,415 விசேட கூட்டங்களுக்காவும், ரூபா 443,894 விசேட விழா நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 558,893 உபசாரச் செலவினங்களுக்காகவும் என உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பாக அவ் உபசாரச் செலவினப் பயன்பாட்டுப் பணி மற்றும் அது மேற்கொள்ளப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பொதுக் கூட்டங்களின் 12 தவணைகளுக்காக உபசாரச் செலவினமாக ரூபா 255,387 தொகை செலவிடப்பட்டிருந்தது. பொதுக் கூட்டத்திற்காக 65 இற்கும் 75 இற்கும் இடைப்பட்ட மதிய உணவுப் பொதிகள் ஒரு அமர்விற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை என்பது குறித்து நிர்ணயிக்கப்பட முடியாத போதிலும் சபையின் மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை 22 மாத்திரமே ஆகக் காணப்பட்டது.

(இ) ஏதேனும் சமய, புண்ணிய, கலாச்சார, சுகாதார, விநோத மற்றும் கல்விச் செயற்பாடு தொடர்பாக ஒரு வருடத்திற்கு மொத்தக் கூட்டுத்தொகை 1,000 இற்கு மேலான செலவினம் ஏற்கப்படின் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 132 (ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் இதற்காக அமைச்சரின் முன்னங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வாண்டில் பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் நடாத்தப்பட்டிருந்த நடமாடும் சேவையின் உபசார நடவடிக்கைகளிற்காக ரூபா 79,280 தொகையும் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தன.

### 3.2 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளை சமப்படுத்தும் செயற்பாட்டிற்காக வாடகை அடிப்படையில் வேன் லோடர் ஒன்று பெறப்படுவதற்காக சபையால் 2010 சனவரி முதல் 2014 திசெம்பர் வரை ரூபா 10,356,500 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் வேன் லோடர் ஒன்று கடன் அடிப்படையிலேனும் கொள்வனவு செய்யப்படுவதற்கு சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், சபையால் புதிய வீதி பதனிடும் இயந்திரம் ஒன்று ரூபா 9,016,253 இற்கு 2013 யூலை 23 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. வீதி பதனிடும் இயந்திரம் ஒன்று சபையிடம் இருக்கையில் புதிய வீதி பதனிடும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதன் மூலம் வேன் லோடர் ஒன்று கொள்வனவு செய்யப்படுவதற்கான தேவைப்பாடு கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 195 முதல் 199 வரையான விதிகளிற்கு இணங்க நுகர்வோர் களஞ்சியப் பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 203 மற்றும் 217 இன் பிரகாரம், 2014 ஆம் ஆண்டிற்காக சபையின் முழுமையான ஆதனங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வும், சகல காணி, கட்டிடங்களின் மெய்மையாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் பணக் கொடுப்பனவு நடவடிக்கைகள், வழங்கலுக்காக முற்பணம் பெறப்படும் நடவடிக்கைகள், பெறப்பட்ட முற்பணத்தில் இருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்படுதல், இதற்கான உறுதிச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து முற்பணத்தைத் தீர்த்தல், களஞ்சியப் பொறுப்பாளராகச் செயற்படுதல் போன்ற கடமைகள் ஒரே உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததன் மூலம் சபையின் நிதி நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மை இல்லாதிருந்ததுடன் இது உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாகவும் சர்ச்சைக்குரிய தன்மையாகக் காணப்பட்டது.

(உ) சபையிடம் உள்ள 23 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நலன்புரி நடவடிக்கைகளிற்காக 2014 பெப்ரவரி 20 ஆம் திகதி ரூபா 107,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 10 நீர்த் தாங்கிகளில் 04 தாங்கிகள் அன்றைய நாள் முதல் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி வரையிலும் பிரதேச சபை அமைச்சர்களின் பொறுப்பில் இருந்தன.

(எ) 2014 நவம்பர் மாதம் திவிநெகும திணைக்களத்தின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 528 ஜீ 1 குழாகளில் கணக்காய்வுத் தினமாகிய 2015 ஏப்ரல் 07 ஆம் திகதி வரையிலும் 87 குழாய்கள் மாத்திரம் சபை கிளையில் காணப்பட்டன. இதன் படி, 441 ஜீ 1 குழாய்களின் பற்றாக்குறை காணப்பட்டது. ஜீ 1 குழாய்களின் பெறுவனவு மற்றும் வழங்கல் இருப்பு புத்தகங்களிலோ அல்லது ஏனைய எந்தவித பதிவேட்டிலுமோ பதியப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 பெப்ரவரி 24 ஆம் திகதி களஞ்சியப் பொறுப்பாளருடன் களஞ்சியத்தில் காணப்பட்ட 06 இருப்பு விடயங்களிற்கு பௌதீக ரீதியாகப் பரீட்சிக்கையில் 283 பொருள் அலகுகளின் மிகையும், 76 அலகுகளின் பற்றாக்குறையும் நிலவியது.

### 3.3 உத்தியோகபூர்வ விடுதித் தொலைபேசிக் கட்டணம்

2010 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2(ஏ) ஆம் பந்தியின் பிரகாரம் தொலைபேசிப் பட்டியல்களை ஏற்பாடு செய்யப்படுவதற்கு உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், உள்ளூராட்சி நிறுவக உத்தியோகத்தர்களுக்காக இச் சுற்றறிக்கையின் கீழ் கொடுப்பனவு செய்வதற்கு மேலும் ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அத்தகைய அங்கீகாரம் பெறப்படாது சபைச் செயலாளரின் விடுதித் தொலைபேசிக்காக மாதாந்தம் ரூபா 4,000 தொகையான எல்லையின் கீழ் 2014 செப்தெம்பர் முதல் கணக்காய்வுத் தினமாகிய 2015 சனவரி வரை ரூபா 19,110 சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறே சபை நிதியத்தில் இருந்து ரூபா 3,800 தொகை செலவிடப்பட்டு சபைச் செயலாளரிற்கு விடுதி தொலைபேசியும் வழங்கப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்

(உ) வாகனக் கட்டுப்பாடு